# My first step in the world of Blogging

by Narendra Modi 14. April 2009 14:17



நண்பர்களே,

உங்களுடைய அன்புநிறைந்த பாசம் மற்றும் விடா முயற்சியே பிளாக்கிங் உலகத்தில் ஈடுபட என்னை ஊக்க மூட்டியது.

‘‘இன்று ஏப்ரல் 14 ம் நாள். டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர் அவர்களின் 118வது ஆண்டு நிறைவு ஆகும். இந்த மாபெரும் மனிதருக்கு என்னுடைய எளிய பாராட்டுகளை உரித்தாக்குகிறேன். இவர் சமூகத்தில் பின் தங்கிய வகுப்பில் பிறந்தவர். பல சிக்கல்களையும் சோதனைகளையும் கடந்து சாதனை படைத்தவர். உங்கள் அறிவை பெருக்கிக் கொள்ளுங்கள், ஒன்றுபடுங்கள் மற்றும் உங்கள் உரிமைகளுக்காக போராடுங்கள்’’. என்பது அவருடைய தாரக மந்திரமாகும்.

பாபாசாஹேப் அம்பேத்கர் நமது அரசியலப்மைப்பின் சிற்பி அவர்களை அவருடைய பிறந்த நாள் அன்று நினைவு கூறும் வேளையில் நாம் தேர்தல்கள் எனப்படும் விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். உலகத்தில் இந்தியா மிகப்பெரிய குடியரசு என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேர்தல் என்பது மிகப் பெரிய விழாவாகும். இயற்கையாக விழாக்கள் வண்ணமயமாக விளங்குவது போல் தேர்தலிலும் பல வண்ணங்கள் உள்ளன. மேலும் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தங்களுடைய சொந்த கோட்பாடுகளையும் குறிக்கோள்களையும் கொண்டுள்ளார்கள் என்பது புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

இந்தியாவின் ஒரு குடிமகனாக மற்றும் ஒரு வாக்காளராக, நாம் ஒரு குறிக்கோளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். எவ்வாறு இந்தியாவை அதிக வலிமைமிக்கதாக்குவது? எவ்வாறு இந்தியாவை வளமைமிக்கதாக்குவது? குடியரசு மிகவும் வலிமையுடையதாக, பண்பட்டதாக மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக இருக்கச் செய்வது குடிமக்களாகிய நமது முதன்மையான கடமையாகும்.

ஒவ்வொரு வாக்காளரின் இதயத்திலும் நாட்டின் நலன் மட்டுமே மேலோங்கிய உணர்வாக திகழவேண்டும்.

நண்பர்களே, இந்த பிளாக் மூலம், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுவதைக் காட்டிலும், விவாதம், கலந்துரையாடல், வேறுப்பட்ட கோணத்தில் பார்வை நேர்மையான அணுகுமுறை என செயல்பட்டால் ஒருமித்த சிந்தனையின் மகிழ்ச்சியை பெறமுடியும்.

- தனிப்பட்ட சிந்தனை பொதுவான ஒன்றாக ஆக முடியும்.

- ஒரு தனி நபர் எடுத்து வைக்கும் ஒரு அடி எல்லோரும் வீறு நடைபோட வழிவகுக்கிறது.

- ‘என்னுடையது நன்று’, என்ற நிலையிலிருந்து’ ‘நல்லவை எனக்கு சொந்தமானவை’ என்ற அணுகுமுறைக்கு நம்மை மாற்றிக் கொள்ளுவோம்.

நண்பர்களே வரும் நாட்களில் அதிக எண்ணங்களை பரிமாறிக் கொள்ளுவோம். இன்று இத்துடன் விடை பெறுகிறேன்.

மீண்டும் சந்திப்போம்.



Copyright © 2009 NarendraModi.com